

தமிழ்நாடு அரசு

வாழ்வியல் திறன்கள்
மற்றும்
விழுமியக் கல்வி



இரண்டாம் வகுப்பு

2025 - 2026

பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

2nd_Std_Value_Education_2025.indd 1 01-04-2026 17:30:46

தமிழ்நாடு அரசு

முதல் பதிப்பு – 2025

நூல் உருவாக்கமும் தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

© SCERT 2025

நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

www.textbooksonline.tn.nic.in

2nd_Std_Value_Education_2025.indd 2 01-04-2026 17:30:46



இந்திய அரசமைப்பு

முகப்புரை

இந்திய மக்களாகிய நாம், இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்,

அதன் குடிமக்கள் அனைவரும்
சமுதாய, பொருளியல், அரசியல், நீதி;
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை;
சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்;

அவர்கள் அனைவரிடையேயும்
தனி மனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்;

உள்ளார்ந்த உறுதியுடையராய்,
நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.

2nd_Std_Value_Education_2025.indd 3 01-04-2026 17:30:47



அன்பான மாணவர்களே!

உங்களுக்குக் கதைகள் பிடிக்கும் அல்லவா? அதுவும் படக்கதைகள்! வண்ணப் படக்கதைகள்! ஆம்! நீங்கள் விரும்பும் படக்கதைகளே இந்தப் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு கதையையும் நீங்கள் படித்துப் பார்க்கலாம், ஆசிரியர் சொல்லக் கேட்கலாம் அல்லது உங்கள் நண்பர்களுடன் இணைந்து படிக்கலாம். ஒவ்வொரு கதையையும் தெரிந்துகொண்ட பிறகு, கொடுக்கப்பட்டுள்ள சிறுசிறு பயிற்சிகளைச் செய்துபாருங்கள். உங்களுக்கான கருத்துகளை நீங்கள் தெரிந்துகொள்வீர்கள்! தெளிவு பெறுவீர்கள்! எதைச் செய்ய வேண்டும்? எதைச் செய்யக் கூடாது? எது சரி? எது சரி அல்ல? எனத் தெளிவு பெற்றபின் அதைப் பின்பற்றுங்கள். மகிழ்ச்சியாக வாழ உங்கள் அனைவருக்கும் அன்பு வாழ்த்துகள்!



2nd_Std_Value_Education_2025.indd 4 01-04-2026 17:30:47

பண்பான ஆசிரியர்களே!

நாம் அன்றாடம் வேறுபட்ட மனநிலையில் உள்ள, வெவ்வேறு தேவைகள் உள்ள மாணவர்களைச் சந்தித்து வருகிறோம். மாணவர்களுக்கான வரையறைக்கு உட்படாதவர்களையும் பார்த்து வருகிறோம். பாடங்களைத் தாண்டி இம்மாணவர்கள் வாழ்வில் வெற்றிபெறப் பல்வேறு நற்பண்புகள், விழிப்புணர்வுகளைக் கற்றுத்தர வேண்டியுள்ளது. எனவே, மாணவர்களுக்குத் தேவையான விழுமியங்களும் வாழ்வியல் திறன்களும் விழிப்புணர்வுகளும் கதை, பாடல், உரையாடல் வடிவங்களில் கீழ்க்காணும் சட்டகத்தின்படி அளிக்கப்பட்டுள்ளன.

- அறிவோமா? (ஆர்வமூட்டல்)
- கதை கேட்போமா?

  (கதை / பாடல் / உரையாடல்)
- பேசுவோமா? (கலந்துரையாடல்)
- செய்து பார்ப்போமா?, புரிந்து செய்வோமா? (பயிற்சிகள்)
- உணர்வோம் (தொகுப்புரை)

அறிவோமா? என்ற தலைப்பில் படமாக, பயிற்சியாக, பாடலாக அளிக்கப்பட்டுள்ள கருத்துகளை மாணவர்கள் உள்வாங்கிக்கொள்ளும் வகையில் ஆர்வமூட்டுங்கள்.

கதை/பாடல்/உரையாடல்களை நீங்கள் படித்துவிட்டு மாணவர்களுக்குக் கூறுங்கள் அல்லது படித்துக் காட்டுங்கள். பாடல்களை உங்களோடு இணைந்து மாணவர்களையும் பாடச்செய்யுங்கள். உரையாடல் எனில், வகுப்பில் மாணவர்கள் உரையாடல் நிகழ்த்த வழிகாட்டுங்கள்.

2nd_Std_Value_Education_2025.indd 5 01-04-2026 17:30:47

கதை/பாடல்/உரையாடல்களின் இறுதியில் கேள்விகள் இடம்பெற்றிருக்கும். அதிலிருந்து வகுப்பறையில் கலந்துரையாடல் நிகழ்த்துங்கள். எந்த விழுமியக் கருத்து மாணவர்களைச் சென்றடைய வேண்டுமென நினைக்கிறோமோ அதையொட்டி உங்கள் கலந்துரையாடல் அமையவேண்டும். அதற்கேற்ப உங்கள் கேள்விகள், கருத்துகளைக் கட்டமைத்துக் கொள்ளுங்கள்.

கலந்துரையாடலுக்குப் பிறகு மாணவர்கள், புரிந்துகொண்டு செயல்பாடுகள் மூலம் கற்றுக்கொள்வதற்கு ஏற்பச் சில பயிற்சிகள் அளிக்கப்பட்டிருக்கும். இவற்றைச் செய்யும் மாணவர்கள், தாம் கற்றதை உணர்ந்து பின்பற்றுவர். மேலும், விழுமியக்கல்வி சார்ந்து சிற்சில செயல்திட்டங்களையும் தொடர்பணிகளையும் மாணவர்கள் செய்ய வழிகாட்டுங்கள். அதை வகுப்பறையில் காட்சிப்படுத்தவும் மறக்க வேண்டாம்.

உங்களுக்கான முக்கியக் குறிப்பு – இந்நூலில் உள்ள கதைகளையும் பயிற்சிகளையும் படித்துக்காட்டி விழுமியக் கருத்துகளை அவர்கள் உணர வழிகாட்டுங்கள்.

ஒரே வகுப்பில், ஒரே கதையில், ஒரே கலந்துரையாடலில் மாணவர்கள் விழிப்புணர்வு அடைவது சற்றுக் கடினம். அதற்கு உங்களின் மனந்தளரா வழிகாட்டுதல் தேவைப்படும். எந்த மாணவருக்கு எது தேவை? என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். இக்கையேட்டில் அளிக்கப்பட்டுள்ள விழுமியங்கள், வாழ்க்கைத் திறன்கள், பாலினம் பற்றிய புரிதல், பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு, சுகாதாரமான பழக்கவழக்கங்கள், ஆரோக்கியமான உணவுப் பழக்கங்கள், நேர்மறை எண்ணங்கள் ஆகியவை சார்ந்த கூறுகளின் பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சமூகத்திற்கு, அன்பும் அக்கறையும் பொறுப்பும் பொதுநலனும் கொண்டவர்களாக வாழ்ந்திடும் வண்ணம் மாணவர்களை மாற்றிடும் உங்கள் அனைவருக்கும் மனமார்ந்த பாராட்டுகள்.

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்.

2nd_Std_Value_Education_2025.indd 6 01-04-2026 17:30:47

வாழ்வியல் திறன்கள் மற்றும் விழுமியக் கல்வி

(1–5 வகுப்பு மாணவர்களுக்கானவை)

விழுமியங்கள் – Values

- **கருணை**, **இரக்கம்**, நேர்மை, தூய்மை, **பாசம்**, நட்பு
- **அன்பு**, நன்றியுணர்வு, உதவும் மனப்பான்மை, **நல்ல பழக்கங்கள்**
- பிறரை மதித்தல், **ஆதரவு அளித்தல்**, **வழக்கப்படுத்துதல்**, **பிற உயிரினங்களிடம் அன்பாய் இருத்தல்**, ஒற்றுமையாய் வாழ்தல்
- **மன்னித்தல்**, **ஆர்வம்**, பொதுநலம் பேணுதல்
- பாராட்டுதல், தன்னம்பிக்கை, பொறுமை, காலந்தவறாமை

வாழ்வியல் திறன்கள் – Life Skills

- தன்னையறிதல்
- நல்லுறவை மேம்படுத்துதல்
- **படைப்புச்சிந்தனையை வளர்த்தல்**
- பிறர் நிலையில் தன்னை வைத்துப் பார்த்தல்

பாலினப் புரிதல் – Gender Sensitization

- **பாலினச் சமத்துவம்**
- பாதுகாப்பான, பாதுகாப்பற்ற தொடுதல்
- குழந்தைகள் மீதான துன்புறுத்தல் சார்ந்த விழிப்புணர்வு

பாதுகாப்பும் விழிப்புணர்வும் – Safety & Awareness

- **சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல்**, ஆற்றல் மற்றும் தண்ணீர் சேமிப்பு
- **சாலைவிதிகள் குறித்த விழிப்புணர்வு**
- **தண்ணீர், நெருப்பு மற்றும் மின்சாரத்திலிருந்து பாதுகாப்பு**

ஊடகங்களின் தாக்கம் – Impact of media

- **தொலைக்காட்சி / அலைபேசி / கணினிப் பயன்பாட்டில் கவனமாக இருத்தல்**

சுகாதாரமான பழக்கவழக்கங்கள் – Hygienic Habits

ஆரோக்கியமான உணவுப் பழக்கங்கள் – Healthy Food Habits

நேர்மறை எண்ணங்கள்/ சிந்தனை – Positive Thinking

2nd_Std_Value_Education_2025.indd 7 01-04-2026 17:30:47

பொருளடக்கம்

வ. எண்	தலைப்பு	பக்க எண்
1	குக்கீ கோழிக்குஞ்சு	1
2	பழமும் பாப்பாவும்	7
3	மீனு... தேனு...	11
4	நம்மை நாமே பாதுகாப்போம்	16
5	பூமிக்குள் புதையல்	21
6	ஆமையின் அறிவு	26
7	எறும்பும் சிறுமியின் குறும்பும்	30

2nd_Std_Value_Education_2025.indd 8 01-04-2026 17:30:47

1 குக்கீ கோழிக்குஞ்சு



அறிவோமா?

என்னைப் பற்றி...

என் நிழற்படம்

என் பெயர் _____

என் செல்லப் பெயர் _____

எனக்குப் பிடித்தவற்றை வரைவேன்.

2nd_Std_Value_Education_2025.indd 1 01-04-2026 17:30:48

எனக்குத் தெரிந்தவை ✓ செய்வேன்; தெரியாதவை × குறியிடுவேன்.



என் சீருடையை நானே அணிந்து கொள்வேன்.



எனக்கான உணவை நானே தட்டில் போட்டுக் கொள்வேன்.



என் காலணியைப் பிறர் உதவி இல்லாமல் போட்டுக் கொள்வேன்.



என் நண்பர்களுடன் கூடி விளையாடுவேன்.



வீட்டில் சிறுசிறு வேலைகளைச் செய்வேன்.



கடைக்குச் சென்று பொருள்களை வாங்கிவருவேன்.

ஆசிரியர் குறிப்பு	பயிற்சிகளைப் படித்துப் புரிந்துகொள்ள வழிகாட்டுங்கள்.

2nd_Std_Value_Education_2025.indd 2 01-04-2026 17:30:57



கதை கேட்போமா?







2nd_Std_Value_Education_2025.indd 3 01-04-2026 17:31:06

குக்கீ, தனக்குள் தைரியத்தை வரவழைத்துக் கொண்டது. தன்னைத் துரத்திக் கொண்டிருந்த எலியை நோக்கித் திரும்பியது. தன் அம்மாவைப்போலத் தன் உடலைச் சிலிர்த்துக் காட்டியது.



இதைக்கண்டு பயந்த எலி ஓடிப்போனது.



தூரத்தில் பார்த்துக்கொண்டிருந்த அம்மாவோ மகிழ்ச்சியுடன் ஓடிவந்து குக்கீயை இறகுகளால் அணைத்துக் கொண்டது.



இப்போது குக்கீ மற்றவர்களோடு சேர்ந்து துணிச்சலாக வாழப் பழகிக் கொண்டிருக்கிறது.

செய்வது துணிந்து செய்
– பாரதியார், புதிய ஆத்திசூடி (31)



பேசுவோமா?

- நீங்கள் வீட்டைவிட்டு எங்காவது தனியாகச் சென்று இருக்கிறீர்களா?
- நீங்கள் உங்கள் பய உணர்வை எவ்வாறு மாற்றிக் கொள்வீர்கள்?

2nd_Std_Value_Education_2025.indd 4 01-04-2026 17:31:09



புரிந்து செய்வோமா?

ஆசிரியர் குறிப்பு பயிற்சிகளைப் படித்துப் புரிந்துகொள்ள வழிகாட்டுங்கள்.

1. பின்வருவனவற்றுள் உங்களிடம் உள்ள பண்புகள் எவை? (✓) குறியிடுக.



விலங்குகளைக் கண்டால் பயப்படுவேன். ☐

உயிரினங்களிடம் அன்புகாட்டுவேன். ☐





அடிக்கடி கோபப்படுவேன். ☐

அனைவரிடமும் நட்பாகப் பழகுவேன். ☐





பிறருக்கு உதவி செய்யத் தெரியாது. ☐

முடிந்தால் பிறருக்கு உதவுவேன். ☐





தனியாக இருப்பேன். ☐

பிறருடன் சேர்ந்து இருப்பேன். ☐



2nd_Std_Value_Education_2025.indd 5 01-04-2026 17:31:15

2. செழியனைப் போல, உங்களைப்பற்றியும், உங்கள் நண்பர்களைப் பற்றியும் நீங்கள் கூற முடியுமா?



- என் பெயர் செழியன்.
- நான் இரண்டாம் வகுப்புப் படிக்கிறேன்.
- எனக்குப் பாடுவது பிடிக்கும்.
- எனக்குப் பல்லியைப் பார்த்தாலே பயம்.
- எனக்கு இரண்டு நண்பர்கள் – மணி, சிவானி.
- மணி, மிதிவண்டி நன்றாக ஓட்டுவான்.
- சிவானிக்கு நீந்துவது பிடிக்கும்.
- நாங்கள் மூவரும் ஒன்றாக விளையாடுவோம்.



உணர்வோம்

நாம் முதலில் நம்மைப்பற்றி அறிந்துகொள்ள வேண்டும். நமது பெற்றோர், ஊர், முகவரி, அலைபேசி எண் போன்றவற்றை அறிந்துகொள்ள வேண்டும்.

மேலும், நமக்குப் பிடித்தவை, பிடிக்காதவை, தெரிந்தவை, தெரியாதவை பற்றியும் அறிந்துகொள்ள வேண்டும். தெரியாதவற்றைத் தெரிந்துகொள்ள முயல வேண்டும். நாம் எதைக்கண்டு பயப்படுகிறோம்? என அறிந்து அந்தப் பயத்திலிருந்து வெளிவருவதற்கு என்ன செய்ய வேண்டும்? எனச் சிந்திக்க வேண்டும். இவ்வாறு நம்மைப்பற்றி நாம் அறிந்துகொண்டு வாழ்ந்தால் வாழ்க்கையில் உயரலாம்.

2nd_Std_Value_Education_2025.indd 6 01-04-2026 17:31:16

2 பழமும் பாப்பாவும்



அறிவோமா?



அன்பு காட்டுதல்



ஒற்றுமையாக இருத்தல்



இருப்பதைப் பகிர்தல்



பிறருக்கு உதவி செய்தல்

- மேற்கண்ட படங்களில் இருந்து நீங்கள் தெரிந்துகொள்வது என்ன?
- நீங்கள் யாரிடம் அன்பாக இருப்பீர்கள்? ஏன்?

2nd_Std_Value_Education_2025.indd 7 01-04-2026 17:31:19



கதை கேட்போமா?







2nd_Std_Value_Education_2025.indd 8 01-04-2026 17:31:22

அம்மாவுக்கும் ஆப்பிள்தான் மிகவும் பிடிக்கும். இரண்டு பழங்களுள் ஒன்றைக் கேட்டார். ஆனால், பாப்பாவோ முதலில் ஒரு ஆப்பிளைக் கடித்தாள். பிறகு இன்னொரு ஆப்பிளையும் கடித்தாள். அம்மாவின் முகத்தில் ஏமாற்றம் தெரிந்தது. அதை வெளிப்படுத்த முடியாமல் தவித்தார் அம்மா. கண நேரம்தான்!



அம்மாவின் கண்களிலிருந்து கண்ணீர் வந்தது. ஏன் என்று யாருக்கும் புரியவில்லை. உங்களுக்கு ஏதும் புரிகிறதா?

அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்
புன்கண்நீர் பூசல் தரும் – திருக்குறள் (71)



பேசுவோமா?

எது நல்லதோ அதைத்தானே பகிர வேண்டும்? அதுதானே அன்பு! உங்கள் கருத்துகளைக் கூறுங்களேன்.

2nd_Std_Value_Education_2025.indd 9 01-04-2026 17:31:24



புரிந்து செய்வோமா?

ஆசிரியர் குறிப்பு பயிற்சிகளைப் படித்துப் புரிந்துகொள்ள வழிகாட்டுங்கள்.

சரியானவற்றிற்கு ✓ செய்க.

1. **நீங்கள் எப்போது மகிழ்ச்சியாக இருப்பீர்கள்?**

   பிறரிடம் அன்பாகப் பேசும்போது – ☐

   தனியாக அமர்ந்து சாப்பிடும்போது – ☐

   நண்பர்களுடன் விளையாடும்போது – ☐

   பிறருக்கு உதவும்போது – ☐

   பிறரிடம் சண்டை போடும்போது – ☐

2. **உங்களிடம் இரண்டு மிட்டாய்கள் இருந்தால் என்ன செய்வீர்கள்?**

   நானே இரண்டையும் சாப்பிடுவேன். ☐

   யாராவது கேட்டால் மட்டும் கொடுப்பேன். ☐

   உடனிருக்கும் நண்பருக்குக் கொடுப்பேன். ☐

3. **பிறருக்குக் கொடுக்கும்போது** –

   எனக்குப் பிடிக்காததை மட்டும் கொடுப்பேன். ☐

   எனக்குப் பிடித்ததை மகிழ்ச்சியோடு கொடுப்பேன். ☐

4. **பிறருக்குப் பகிர்ந்து கொடுப்பதில் எனக்கு** –

   மகிழ்ச்சி ☐ கவலை ☐

   ஏன்? கூறுக.



உணர்வோம்

பகிர்தல் என்பது ஒருவருக்கு ஒருவர் கொடுத்து மகிழும் சிறந்த பண்பு. அன்பைப் பகிர்வதால் இருவர் மனமும் மகிழும். நல்ல சொற்களைப் பகிர்ந்து கொண்டால் நல்ல உறவுகள் நீடிக்கும். பொறுப்புகளைப் பகிர்ந்துகொண்டால் பணிகள் சிறக்கும். அனைத்தையும் பகிர்ந்து மகிழ்ச்சியாய் வாழ்வோமா?

2nd_Std_Value_Education_2025.indd 10 01-04-2026 17:31:24

3 மீனு... தேனு...



அறிவோமா?

இவற்றுள் சரியான செயல்கள் எவை? ஏன்?









2nd_Std_Value_Education_2025.indd 11 01-04-2026 17:31:25



கதை கேட்போமா?







2nd_Std_Value_Education_2025.indd 12 01-04-2026 17:31:28







2nd_Std_Value_Education_2025.indd 13 01-04-2026 17:31:31





சீர்மை மறவேல் –ஔவையார், ஆத்திசூடி (47)



பேசுவோமா?

- இனி தேனுவுக்குத் தலைவலி வராமல் இருக்க என்ன செய்ய வேண்டும்?
- தேனு, மீனு இவர்களில் நீங்கள் யாரைப் போல இருக்க விரும்புகிறீர்கள்? ஏன்?



புரிந்து செய்வோமா?

ஆசிரியர் குறிப்பு பயிற்சிகளைப் படித்துப் புரிந்துகொள்ள வழிகாட்டுங்கள்.

1. சரியான செயல்களுக்கு ✓ குறியிடுக; தவறானவற்றிற்கு × குறியிடுக.

- குப்பைகளைக் குப்பைத்தொட்டியில் போடவேண்டும். ☐
- தண்ணீரை வீணாக்கலாம். ☐
- வரிசையில் நிற்க வேண்டும். ☐
- தினமும் குளிக்கத் தேவையில்லை. ☐

2nd_Std_Value_Education_2025.indd 14 01-04-2026 17:31:32

2. பொருத்துக.













3. ஒழுங்கற்ற அறைக்கும் நேர்த்தியான அறைக்கும் உள்ள வேறுபாடுகள் குறித்துக் கலந்துரையாடுக.



ஒழுங்கற்ற அறை



நேர்த்தியான அறை



உணர்வோம்

நாம் வீட்டிலும் வெளியிலும் பல்வேறு பழக்கங்களைக் கடைப்பிடிக்கிறோம். நமது நல்ல பழக்கங்களால் நாம் நல்ல குழந்தைகள் என்று பெயர் வாங்குகிறோம். நல்ல பழக்கங்கள், நமது உடலையும் மனதையும் ஆரோக்கியமாக வைத்திருக்க உதவுகின்றன. அலைபேசியைத் தேவையானபோது மட்டும் பயன்படுத்துவது எல்லாரும் விரும்பும் நல்ல பழக்கமே! எனவே, அலைபேசியைக் கவனமுடன் பயன்படுத்துவோம்.

2nd_Std_Value_Education_2025.indd 15 01-04-2026 17:31:33

4 நம்மை நாமே பாதுகாப்போம்



அறிவோமா?











இந்தப் படங்களில் யார் யாருடன் இருக்கிறார்கள்? (✓) செய்க.

அ) அம்மா–மகன் ○ ஆ) அப்பா–மகன் ○ இ) அக்கா–தம்பி ○

ஈ) அம்மா–மகள் ○ உ) பாட்டி–பேத்தி ○ ஊ) தாத்தா–குழந்தை ○

எ) அப்பா–குழந்தைகள் ○

இவர்கள் பாதுகாப்பாக இருக்கிறார்கள் என்பதை நீங்கள் உணர்கிறீர்களா? எப்படி?

2nd_Std_Value_Education_2025.indd 16 01-04-2026 17:31:34



கதை கேட்போமா?







2nd_Std_Value_Education_2025.indd 17 01-04-2026 17:31:34







கொடுமையை எதிர்த்து நில் – பாரதியார், புதிய ஆத்திசூடி (22)

2nd_Std_Value_Education_2025.indd 18 01-04-2026 17:31:35



பேசுவோமா?

- 'யாரிடமும் சொல்லாமல் இரு' என்றால் நீங்கள் என்ன செய்வீர்கள்?
- "மறு, செல், சொல்" – என்பதைப் பற்றி ஆசிரியரிடம் கேட்டு அறிந்தீர்களா? எவ்வாறு?



புரிந்து செய்வோமா?

ஆசிரியர் குறிப்பு பயிற்சிகளைப் படித்துப் புரிந்துகொள்ள வழிகாட்டுங்கள்.

1. எது பாதுகாப்பான தொடுதல்? ✓ குறியிடுக.









2nd_Std_Value_Education_2025.indd 19 01-04-2026 17:31:35

2. நீங்கள் எப்போதாவது பயந்து தனியாக இருந்தீர்களா? பயத்தைப் போக்க என்ன செய்தீர்கள்? கூறுக.



3. ஒவ்வொரு படத்திற்கும் கீழே பொருத்தமான சொற்களை எடுத்து எழுதுக.

மறு செல் சொல்







_____ _____ _____



உணர்வோம்

நாம் நம்மைப் பாதுகாத்துக்கொள்ள எப்போதும் விழிப்புணர்வுடன் இருக்கவேண்டும். நமது பெற்றோரைத் தவிர, மற்றவர்கள் நமது கைகள், கன்னங்கள் அல்லது உடலின் பிற பாகங்களைத் தொடும்போது மிகவும் கவனமாக இருக்கவேண்டும். ஒருவேளை அவர்களின் தொடுதல் நமக்குப் பிடிக்கவில்லை என்றால் மறுத்து அங்கிருந்து வேகமாகச் சென்றுவிட வேண்டும். பிறகு, நம்பிக்கையானவர்களிடமோ அல்லது ஆசிரியர்களிடமோ கூறவேண்டும். இப்படிக் கூறுவதில் நம் மீது எந்தவொரு தவறும் இல்லை. இதுபோன்ற பிறரின் செயல்களால் பயந்தோ வெளியே சொல்லாமலோ இருக்கக்கூடாது.

2nd_Std_Value_Education_2025.indd 20 01-04-2026 17:31:36

5 பூமிக்குள் புதையல்



அறிவோமா?





இரண்டு பூக்களிலும் உங்களுக்குப் பிடித்த பூ எது? ஏன்?





இரண்டு வீடுகளுக்கும் உள்ள வேறுபாடுகள் என்ன?





இரண்டு படங்களில் உங்களுக்குப் பிடித்த படம் எது? ஏன்?

2nd_Std_Value_Education_2025.indd 21 01-04-2026 17:31:38



கதை கேட்போமா?







2nd_Std_Value_Education_2025.indd 22 01-04-2026 17:31:41



விதையினைத் தெரிந்திடு – பாரதியார், புதிய ஆத்திசூடி (105)

2nd_Std_Value_Education_2025.indd 23 01-04-2026 17:31:43



பேசுவோமா?

- நீங்கள் எவையேனும் விதைகளை விதைத்து வளர்த்து உள்ளீர்களா?
- உங்கள் வீட்டிற்கு அருகில் மழைக்காலங்களில் அதிகம் முளைக்கும் செடி எது? ஏன்?



புரிந்து செய்வோமா?

ஆசிரியர் குறிப்பு பயிற்சிகளைப் படித்துப் புரிந்துகொள்ள வழிகாட்டுங்கள்.

நீங்கள் தேர்ந்தெடுப்பதை ✓ செய்க.

1. திருமண விழாவில் மரக்கன்று ஒன்று பரிசாகக் கிடைக்கிறது



அந்த மரக்கன்றை நடமாட்டேன். ☐

அந்த மரக்கன்றை நட்டுப் பராமரிப்பேன். ☐

2. உங்கள் பிறந்த நாளன்று ஆசிரியர் பள்ளி வளாகத்தில் ஒரு மரக்கன்றை நடச் சொல்கிறார்.



மரக்கன்றை நடுவேன். ☐

மரக்கன்றை நடமாட்டேன். ☐

2nd_Std_Value_Education_2025.indd 24 01-04-2026 17:31:44

3. உங்கள் நண்பர்கள் தோட்டத்தில் உள்ள செடிகளைப் பிடுங்கி விளையாடுகிறார்கள்.



நானும் பிடுங்கி விளையாடுவேன். ☐

செடிகளைப் பிடுங்க வேண்டாம் என்று கூறுவேன். ☐

4. உங்கள் பாட்டி, களிமண்ணில் காய்ந்த விதைகளை வைத்து இயற்கை உரங்களைச் சேர்த்து உருட்டிக் காய வைத்து வீட்டிற்கு வருவோர்க்கு எல்லாம் பரிசாக அளிக்கிறார்.



பாட்டிக்கு உதவுவேன். ☐

பாட்டிக்கு உதவமாட்டேன். ☐



உணர்வோம்

காற்று, நீர், மண் போன்ற இயற்கை வளங்கள் நமது வாழ்க்கைக்கு இன்றியமையாதவை. மழை பெய்வதற்கும், தூய்மையான காற்றைப் பெறுவதற்கும் மரங்கள் இன்றியமையாதவை. மரங்கள் கொடுக்கும் ஆக்ஸிஜன் மூலமே நாம் உயிர்வாழ்கிறோம். மனிதனால் வெளியிடப்படும் கரியமில வாயுவை மரங்கள் உட்கொள்கின்றன. மரங்களை அழித்தால் நமக்குக் கிடைக்கும் ஆக்ஸிஜன் அளவு குறைந்துவிடும். எனவே, மரங்களை அதிகமாக வளர்க்க வேண்டும். "இயற்கையோடு இயைந்து வாழ்" என்பதற்கேற்ப நாம் நமது சுற்றுச்சூழலைப் பாதுகாப்போம்! இயற்கையோடு இணைந்து வாழ்வோம்!

2nd_Std_Value_Education_2025.indd 25 01-04-2026 17:31:44

6 ஆமையின் அறிவு



அறிவோமா?









இந்தப் படங்களில் இருந்து நீங்கள் தெரிந்துகொள்வது என்ன? கூறுங்கள்.

2nd_Std_Value_Education_2025.indd 26 01-04-2026 17:31:45



கதை கேட்போமா?



ஒற்றுமை வலிமையாம் – பாரதியார், புதிய ஆத்திசூடி (10)

2nd_Std_Value_Education_2025.indd 27 01-04-2026 17:31:49



பேசுவோமா?

அனைவரும் பாதுகாப்பாக ஆற்றைக் கடக்க உதவியது எது?

ஒற்றுமையாகச் செயல்படுவதால் ஏற்படும் நன்மைகள் யாவை?



புரிந்து செய்வோமா?

ஆசிரியர் குறிப்பு பயிற்சிகளைப் படித்துப் புரிந்துகொள்ள வழிகாட்டுங்கள்.

இந்தச் சூழல்களில் நீங்கள் என்ன செய்வீர்கள்? ✓ செய்க.

1. கபிலன் கொண்டு வந்த காய்கறிப்பை கிழிந்ததால் காய்கறிகள் கீழே கொட்டி விடுகின்றன.



காய்கறிகளை எடுத்துத் தருவேன். ☐

கண்டுகொள்ளாமல் கடந்து செல்வேன். ☐

2. கயிறு இழுக்கும் போட்டியில் ஓர் அணியினர் ஒற்றுமையுடன் செயல்படுகின்றனர். மற்றொரு அணியினர் ஒருவர் சொல்வதை ஒருவர் கேட்காமல் நடந்து கொள்கின்றனர். எந்த அணி வெல்லும்?



தனித்தனியாகச் செயல்படும் அணி ☐ சேர்ந்து செயல்படும் அணி ☐

2nd_Std_Value_Education_2025.indd 28 01-04-2026 17:31:50

3. நீங்கள் வழி தெரியாமல் ஓர் ஊருக்குச் செல்கிறீர்கள். அங்குள்ள யாரிடம் வழி கேட்பீர்கள்?



ஊருக்குப் புதிதாக வந்தவரிடம் ☐

அந்த ஊரில் வசிப்பவரிடம் ☐

4. தொடர் ஓட்டப்போட்டியில் குழுவின் தலைவராக நீங்கள் பங்கு கொள்கிறீர்கள். அப்படியானால், நீங்கள் என்ன செய்வீர்கள்?



நான் மட்டும் விரைவாக ஓடுவேன். ☐

அனைவரையும் ஊக்கப்படுத்திப் போட்டியில் வெற்றிபெற முயற்சி செய்வேன். ☐



உணர்வோம்

ஒற்றுமையே பலம் என்பர். மனிதர்கள் மட்டுமன்றி விலங்குகளும் பறவைகளும் கூட்டாகவே வாழ விரும்புகின்றன. ஒற்றுமையாக வாழ்வதன் மூலம் பல நன்மைகளைப் பெறலாம். அதனோடு செய்வதற்கு அரிய செயல்களையும் சிறப்பாகச் செய்யமுடியும். எனவே, "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்பதற்கு ஏற்ப ஒற்றுமையுடன் வாழ்வோம்.

2nd_Std_Value_Education_2025.indd 29 01-04-2026 17:31:50

7 எறும்பும் சிறுமியின் குறும்பும்



அறிவோமா?









இவர்களைப் போன்று நீங்கள் விலங்குகளிடம் அன்பு செலுத்துவது உண்டா?

2nd_Std_Value_Education_2025.indd 30 01-04-2026 17:31:52



கதை கேட்போமா?



2nd_Std_Value_Education_2025.indd 31 01-04-2026 17:31:54



எறும்புகளின் சுறுசுறுப்பு, சேமிக்கும் பழக்கம், கடமையைச் செய்யும் பழக்கம் ஆகியவை எழிலிக்கு மிகவும் பிடித்தன. அன்று முதல், எறும்புகளுக்கும் உணவு கொடுக்கத் தொடங்கினாள்.

உயிர்களிடத்தில் அன்பு வேணும் – பாரதியார்



பேசுவோமா?

- எழிலி எறும்புகளுக்கு ஏன் உணவு கொடுத்தாள்?
- வெயில் காலங்களில் பறவைகளின் தண்ணீர் தாகத்தை எப்படித் தீர்க்கலாம்?

2nd_Std_Value_Education_2025.indd 32 01-04-2026 17:31:55



புரிந்து செய்வோமா?

ஆசிரியர் குறிப்பு பயிற்சிகளைப் படித்துப் புரிந்துகொள்ள வழிகாட்டுங்கள்.

1. உங்கள் வீட்டிற்குப் பறவைகள் வந்து செல்கின்றன.



உணவு கொடுப்பேன். ☐

உணவு கொடுக்க மாட்டேன். ☐

2. உங்கள் தெருவில் பூனைக்குட்டி ஒன்று அடிபட்டுக் கிடக்கிறது.



உதவி செய்வேன். ☐

உதவி செய்ய மாட்டேன். ☐

3. அணில் தலையில் நெகிழிப்பை மாட்டிக்கொண்டது .



நெகிழிப்பையை எடுத்துவிடுவேன். ☐

நெகிழிப்பையை எடுத்துவிட மாட்டேன். ☐



உணர்வோம்

நம்மிடம் யாரேனும் அன்பாக நடந்துகொண்டால் பிடிக்கும் அல்லவா? அதைப்போலவே நாமும் மற்றவர்களிடம் அன்பாக நடந்தால்தான் அவர்களுக்கும் நம்மைப் பிடிக்கும். நம் உறவினர்கள், நண்பர்கள் மட்டுமில்லாமல் அனைத்து உயிர்களிடமும் அன்பாக இருந்தால் அவையும் நம்மோடு அன்பாக இருக்கும். எனவே, அன்பைப் பகிர்ந்து மகிழ்ச்சியோடு வாழ்வோம்.

2nd_Std_Value_Education_2025.indd 33 01-04-2026 17:31:55

நல்ல பழக்கங்களை நாளும் கடைப்பிடிப்போம்!



தேவையற்ற இடங்களில் நான்
உரக்கப் பேசமாட்டேன்.



பிறர் பேசும்போது
இடைமறித்துப் பேசமாட்டேன்.



நான் அனைவரிடமும்
நட்புடன் பழகுவேன்.



பார்க்காத எதையும் பார்த்தது
போலப் பேசமாட்டேன்.



பிறர் பேசும்பொழுது
கவனமாகக் கேட்பேன்.



பெரியவர்களிடம் பணிவாகவும் அன்பாகவும்
மரியாதையோடும் பேசுவேன்.

2nd_Std_Value_Education_2025.indd 34 01-04-2026 17:31:59



நண்பர்களுடன் பகிர்ந்து
உண்பேன்.



நானே முன்வந்து உதவுவேன்.



என்னுடைய முறை வரும்வரை
காத்திருப்பேன்.



நண்பர்களைப் புரிந்துகொள்வேன்;
சமவாய்ப்புக் கொடுப்பேன்.



அனைத்துச் செயல்பாடுகளிலும்
முன்வந்து பங்கேற்பேன்.

2nd_Std_Value_Education_2025.indd 35 01-04-2026 17:32:03

சாலைப் பாதுகாப்பு



பெரியவர்களின் துணையுடன் சாலையினைக் கடப்போம்.



கவனமின்றிச் சாலைகளில் நடப்பதைத் தவிர்ப்போம்.



தலைக்கவசம் அணிந்து வாகனத்தில் செல்வோம்



சாலைகளில் விளையாடுவதைத் தவிர்ப்போம்.



பேருந்தில் பயணம் செய்யும் பொழுது தலை மற்றும் கைகளைச் சன்னலுக்கு வெளியில் நீட்டாமல் இருப்போம்.

கரம், சிரம் புறம் நீட்டாதே!

2nd_Std_Value_Education_2025.indd 36 01-04-2026 17:32:05



2nd_Std_Value_Education_2025.indd 37 01-04-2026 17:32:07

நானும் பின்பற்றுவேன்!

எட்டுக்கால் சிலந்தி நான்,
அறுந்து விழும் வலையையும்
பின்னுவேன்...

விடாமுயற்சி

நீண்ட மூக்குப் பறவை நான்,
மீனைக் கொத்தக்
காத்திருப்பேன்...

பொறுமை

சின்ன எறும்பு நான்,
உணவைச் சிறுகச் சிறுகச்
சேர்த்திடுவேன்...

சேமிப்பு

2nd_Std_Value_Education_2025.indd 38 01-04-2026 17:32:09

பகிர்தல்



சுறுசுறுப்பு

2nd_Std_Value_Education_2025.indd 39 01-04-2026 17:32:10

வாழ்க்கைத் திறன்கள் மற்றும் விழுமியக் கல்வி – வகுப்பு 2

ஆக்கம்

வல்லுநர்

முனைவர். மு. சுதந்திரமுத்து,
இணைப் பேராசிரியர் (ப.நி.,),
மாநிலக் கல்லூரி,
சென்னை.

ஒருங்கிணைப்பாளர்கள் –

திருமதி. ஏ. ஜெகதீஸ்வரி,
துணை இயக்குநர் (பாடத்திட்டம்),
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி நிறுவனம்,
சென்னை – 6.

முனைவர். சீ. பிரபு,
துணை இயக்குநர் (பாடத்திட்டம்),
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி நிறுவனம்,
சென்னை– 6.

மேலாய்வு

முனைவர். க. சு. சங்கீதா,
முதுநிலை விரிவுரையாளர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி நிறுவனம்,
சென்னை 6.

முனைவர். ப. சுமதி,
முதுநிலை விரிவுரையாளர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி நிறுவனம்,
சென்னை 6.

உருவாக்கக் குழுவினர்

திருமதி. கோ. பவளக்கொடி,
இடைநிலை ஆசிரியர்,
தூய தாமஸ் தொ.ப, வியாசர்பாடி,
சென்னை.

திரு. மா. காளிதாசன்,
இடைநிலை ஆசிரியர்,
ஊ.ஒ.ந.நி.ப., எஸ்.எஸ்.புதூர்,
திருப்பூர்.

திரு. வெ. ராஜா,
இடைநிலை ஆசிரியர்,
ஊ.ஒ.ந.நி.ப., இராக்கியாம்பட்டி,
சேலம்.

திருமதி. தே. மே. லோணிலின் சோபியா,
இடைநிலை ஆசிரியர்,
ஊ.ஒ.தொ.ப, மதுரப்பாக்கம்,
செங்கல்பட்டு.

திருமதி. அ. குழந்தை தெரஸ்,
இடைநிலை ஆசிரியர்,
ஊ.ஒ. தொ.ப., சேலம் ஊரகம்,
சேலம்.

பக்க வடிவமைப்பு

திரு. ச. சந்தோஷ்குமார்
திரு. பக்கிரிசாமி அண்ணாதுரை
திரு. ம. இயேசுரத்தினம்

ஓவியம்

திரு. கி. வீரவேல் முருகன்,
ஓவிய ஆசிரியர்,
அ.ஆ.தி.ந.மே.ப., வண்டுராயன்பட்டு,
கடலூர்.

வடிவமைப்புக் குழு மேற்பார்வை

திரு. ம. அமல்ராஜ்,
பட்டதாரி ஆசிரியர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி நிறுவனம்,
சென்னை 6.

இந்நூல் 80 ஜி.எஸ்.எம் எலிகண்ட் மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது.

ஆப்செட் முறையில் அச்சிட்டோர்:

2nd_Std_Value_Education_2025.indd 40 01-04-2026 17:32:10